5th September 1959]

THE HON. SRI P. KAKKAN : கனம் அங்கத்தினர் அவர்கள் முதலில் கேட்டிருக்கும் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தமில்லை. தனியாக கேள்வி போட்டால் இதற்கு பதில் சொல்லலாம்.

Houses for Kallars

* 155 *Q.*—SRIMATHI A. S. PONNAMMAL : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

கள்ளர் ரெக்லமேஷன் வீடு கட்டும் திட்டத்தில் 1/15 பாகம் முன் பணம் கட்டவேண்டுமென்ற நியதியை மாற்றி ஹரிஜனங்களுக்குக் கொடுப்பது போன்று 1/15 பாகத்தையும் அரசாங்கமே கடனுகக் கொடுத்து உதவ உத்தேசமுண்டா ?

THE HON. SRI P. KAKKAN : Under the housing scheme for De-notified Tribes loans are being advanced even now in exceptional cases to equate the cost of contribution payable by the beneficiaries up to a maximum of Rs. 200 each, if they cannot meet it from their own resources.

SRIMATHI A. S. PONNAMMAL : கனம் சபாநாயகர் அவர்களே, ஒரு சில இடங்களில் ஹரிஜனங்களை காட்டிலும் மோசமான நிலைமையில் கள்ளர் வகுப்பை சேர்ந்தவர்கள் இருந்து கொண்டிருக்கிருர்கள். அவர்களுக்கும் ஹரிஜனங்களுக்கு வீடு கட்டிக்கொடுக்கிற திட்டத்தைப் போன்று ஒரு திட்டத்தை கொண்டு வருவதற்கு அரசாங்கம் மறு பரிசீலனை செய்யுமா ? அதுமட்டுமல்ல இதற்காக ஒதுக்கப்படும் பணம் ஒவ்வொரு வருடமும் மிச்சப்படுவதாகவும் தெரிகிறது. ஆகவே அமைச்சர் அவர்கள் இவர்களுக்கும் ஒரு திட்டத்தைக்கொண்டு வருவதற்கு முன் வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : நான் சொன்ன பதிலிலும் இதைப் பற்றி குறிப்பிட்டேன். ஹரிஜனங்களுக்கு வீடு கட்டுவதற்கு என்று 200 ரூபாய் கடன் கொடுப்பது போன்று இவர்களுக்கும் கடனுக கொடுத்து உதவி செய்யலாம்.

Government Ophthalmic Hospital, Madras

* 156 *Q.*—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the Advisory Committee of the Government Ophthalmic Hospital, Egmore, has recently requested the Government for the increase of hospital accommodation; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) Yes, Sir.

(*b*) Sufficient open space is not available within the compound of the Government Ophthalmic Hospital, Madras, for its expansion. The acquisition of a private property known as ' Shawfield '', situated near the hospital, has been sanctioned by the Government recently.

SRI A. A. RASHEED : What is the total accommodation in the hospital now? Is it a fact that a large number of persons suffering from eye defect are sent out for want of accommodation there?

THE HON. SRI M. A. MANICKAVELU : That is the reason why we have sanctioned acquisition of the neighbouring building; we could not expand the building in the present compound itself.

[5th September 1959

SRI S. LAZAR : ஸார், ஏற்கனவே ஜன நெருக்கடியுள்ள நகரங்களில் இதை விஸ்தரிப்பதற்குப் பதில் (மொபஸல்) வெளியூர்களில் கண் ஆஸ்பத்திரிகளை ஏற்படுத்துகிற திட்டத்தை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : புதிதாக கண் ஆஸ்பத்திரிகளை ஏற்படுத்த வேண்டியதுதான். அதற்கு பணம் அதிகமாக செலவாகும். ஆகவே ஏற்கனவே பெரிய அளவில் இருக்கின்ற ஆஸ்பத்திரிகளில் மேலும் வேண்டிய வசதிகளை விஸ்தரிப்பதுதான் இப்போதிருக்கின்ற நிலைமையில் புத்திசாலித்தனமான செய்கையாகும்.

Rural Industrial Estates

* 157 *Q.*—SRI S. LAZAR :
SRI K. VINAYAKAM : } Will the Hon. the Minister for Industires be pleased to state—

(*a*) whether there is any proposal before the Government to put up "Rural Industrial Estates" in the State in the near future;

(*b*) some details about the scheme; and

(*c*) when, where and at what cost the first such estate is to be started in our State?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) A rural industrial estate has been established at Marthandam in the Kanyakumari district. It is not proposed to start any more rural industrial estates under the Second Five-Year Plan as the working of the rural Industrial Estate at Marthandam has to be watched and in view of the cut in the Plan provision for Industrial Estates.

(*b*) and (*c*) Do not arise.

SRI K. VINAYAKAM : Sir, what is the experience of this Government regarding Rural Industrial Estate? Is it anything as remunerative and is there any good response from the public?

THE HON. SRI R. VENKATARAMAN : Well, the success of an Industrial Estate is judged by the demand for space there. Considering the locality around Marthandam, particularly the absence of industrial background in the area, I should think that the Rural Industrial Estates have some bright future. There are four 'D' Class Units in the Rural Industrial Estate at Marthandam as also a bigger shed, 100' by 36'. All the buildings have been occupied. Therefore, I should think that our experience of the Rural Industrial Estate is fairly successful.

SRI M. R. KANDASWAMI MUDALIYAR : கிராமத் தொழிற் பண்ணைகள் என்னென்ன பொருள்களை உற்பத்தி செய்யக்கூடியவைகளாக அமையும் ?। அவை கிராமங்களில் அமைக்கப்படுமா, அல்லது நகரங்களில் தான் அமைக்கப்படுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : மூலக் கேள்வி கிராமப்புறங்களில் அமைக்கப்படும் தொழிற் பண்ணைகளைப் பற்றியது. மார்த்தாண்டத்தில் ஒரு யூனிட் 'ஹிஞ்ஜெஸ் அண்ட் போல்ட்ஸ்' செய்கிறது, மற்றொரு யூனிட் மெடல் வர்க்ஸ் செய்கிறது, இன்னொன்று 'ஃப்ரூட் கானிங்' (ஃப்ரூட் ப்ரிஸெர்வேஷன்) செய்கிறது.